**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**,,முன்னிலை:–திருமதி.S.சப்னா,B.B.M., L.L.M**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06 ம் நாள் வியாழக்கிழமை**
**E– Crl.M.P.No.123/2026**

M.சாவித்ரி,
க/பெ. லேட் வேலுச்சாமி,
எண்.65 வடக்கு வீதி, 1 வது விஆர் புரம் மேடு,
உப்பிலிபாளையம், கோயம்புத்தூர். ..... மனுதாரர்

// எதிர்//

காவல் ஆய்வாளர்,
பல்லடம், காவல்நிலையம்,
பல்லடம். .... எதிர்மனுதாரர்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது பா.நா.சு.ச. பிரிவு 175(3)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)மனுதாரரின் கணவர் வேலுச்சாமி கடந்த 2020 ம் ஆண்டிலேயே காலம் சென்று விட்டதாகவும் அதன்பிறகு மனுதாரரின் மகளான ஜெயஸ்ரீக்கு மிக சிரமப்பட்டு திருமணம் செய்து வைத்ததாகவும் மனுதாரரின் மகள் அவரது கணவருடன் வாழ்ந்து வருவதாகவும் மனுதாரர் எந்தவித ஆதரவும் இன்றி தனியாக பூக்கடை வைத்து வாழ்ந்து வருவதாகவும் மனுதாரரின் கணவருக்கு பாத்தியப்பட்ட இடமானது திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாலுக்கா, வட்டமலைபாளையம் கிராமம் க.ச.எண்.308/1 ல் பு.ஏ. 4.28 இருந்து வந்து இதில் பு.ஏ. 2.14 பகுதி பூமியை மட்டும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த 2002 ம் ஆண்டிலேயே விற்றுள்ளதாகவும், மனுதாரரின் கணவர் தந்தை காலஞ் சென்ற ஆறுமுகம் அவர்களுக்கு கடந்த 05.12.1974 ம் தேதியில் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட பத்திர எண். 2012/1974 ன்படி மேற்படி சொத்து பாத்தியப்பட்டு அவரது அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்தது பின்னர் கடந்த 30.10.1983 தேதியன்று ஆறுமுகம் எந்தவித ஏற்பாடு செய்து வைக்காமல் காலம் சென்றுவிட்டார் அவரது இறப்பிற்கு பிறகு மேற்படி சொத்து மற்றும் அவருக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களும் குடும்ப சொத்துக்களாக ஆறுமுகம் அவர்களின் மனைவி மயிலாத்தாள், மனுதாரரின் கணவர் வேலுச்சாமி மற்றும்

மனுதாரரின் கணவர் தம்பி குற்றவாளியான சிவசாமி ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்துள்ளனர்.

3)மேற்படி சொத்துக்கள் குறித்து கடந்த 10.02.1984 ம் தேதியன்று பெரியோர்கள் முன்னிலையில் மயிலாத்தாள், வேலுச்சாமி, சிவசாமி ஆகியோர்களுக்கிடையில் வாய்மொழி பாகசாசமானது ஏற்படுத்தப்பட்டு மேற்படி வாய்மொழி பாகசாசனத்தை எழுத்து மூலமாக உறுதி செய்யும் பொருட்டு கடந்த 07.11.1986 ம் தேதியன்று மேற்படி காலஞ் சென்ற ஆறுமுகம் மனைவி மயிலாத்தாள், வேலுச்சாமி சிவசாமி ஆகியோர்களுக்கிடையில் குடும்ப பாக ஏற்பட்டு அட்டவணை பத்திரம் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது அக்குடும்ப ஏற்பாட்டு பத்திரத்தின்படி ஆறுமுகத்திற்கு பாத்தியப் பட்ட சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் மனுதாரரின் கணவரான வேலுச் சாமிக்கு பரிபூரணமாக பாத்தியப்பட்டு அவரது அனுபவ சுவாதீனத்தில் மட்டும் இருந்து வந்தது. பின்னர் கடந்த 24.03.2008 ம் தேதியன்று லேட் ஆறுமுகம் அவர்களின் மனைவி மயிலாத்தாள் அவர்களும் காலஞ்சென்றுவிட்டதாகவும் இச்சூழ்நிலையை குற்றவாளி சிவசாமி தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மனுதாரரின் கணவர் வேலுச்சாமி ஆதரவற்று இருக்கும் சொத்துக்களில் பங்கு கேட்டு வேலுச்சாமியிடம் பிரச்சனை செய்து வந்துள்ளார் மனுதாரரின் கணவர் வேலுச்சாமி கோயம்புத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி 07.11.1986 தேதியிட்ட குடும்ப பாக ஏற்பாடு அட்டவணை பத்திரம் குற்றவாளியான சிவசாமியை கட்படுத்தும் என விளம்புகை பரிகாரம் கோரி OS No,1813/2008 வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் இதனால் சிவசாமி அவ்வழக்கில் மனுதாரரின் கணவர் வேலுச்சாமி கூறியுள்ள சங்கதிகளை உண்மை என ஒப்புக்கொண்டு Submitting to Decree தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே கடந்த 02.04.2009 ம் தேதியன்று கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் குடும்ப பாக ஏற்பாட்டு அட்டவணை பத்திரம் சிவசாமியை கட்டுபடுத்தும்எ னவும் மேற்படி சொத்தில் குற்றவாளி சிவசாமிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு கொடுத்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

4)அதன்பிறகு மனுதாரரின் கணவர் 2020 ம் ஆண்டு இறந்த பிறகு சொத்தை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர் மற்றும் அவரது

மகளுக்கு எதிராக கோயம்புத்தூர் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி ஏற்கனவே மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் சொத்து வேலுச்சாமிஉடையது என்பதற்கான நீதிமன்ற தீர்ப்பு உள்ளதை மறைத்து அ.வ.எண்.938/2020 வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி வழக்கில் மனுதாரரும் மனுதாரரின் மகளும் ஏற்கனவே அ.வ.எண்.1813/2008 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, குடும்ப ஏற்பாட்டு பத்திரம் போன்றவற்றை மறைத்து தனக்கு பாத்தியமே இல்லாத சொத்தினை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கு நிலைக்கத் தக்கதல்ல என வழக்கை எடுத்த ஏற்புலேயே நிராகரிப்பு செய்யகோரி மனுதாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது.

5)மேற்படி அ.வ.எண்.1813/2008 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, குடும்ப ஏற்பாட்டு பத்திரம் அசல், சிவசாமி தாக்கல் செய்த Submitting to Decree என அனைத்தையும் மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்திற்கு உண்டான மூல ஆவண எண். 2012/1974ன் அசல் மனுதாரரிடமே இருந்து வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில் நீதிமன்றம் மேற்படி மனுவில் உத்தரவு பிறப்பிக்கும் சூழ்நிலையில் சிவசாமி என்பவர் மோசடியாக நீதிமன்ற நடவடிக்கைகளை மறைத்தும் ஏற்கனவே OS.No.1813/2008ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை மறைத்தும் சொத்து சுவாதீனம் குறித்த விவரங்களை மறைத்தும் குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தின் விவரங்களை மறைத்தும் பதிவு செய்ய கட்டாயமான 2012/1974ன் அசல் ஆவணம் இன்றியும் மோசடியாக பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 04.11.2025ம் தேதியன்று கோகுலகிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து அதனை 18058/2025 என்ற எண்ணாக பதிவு செய்தும், மேற்படி விவரத்தை கடந்த 10.11.2025ம் தேதியன்று இணையதளம் மூலமாக வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தபோது மனுதாரருக்கு தெரியவந்ததாகவும் மேற்படி மோசடி குறித்து தெரிய வந்ததும் மனுதாரர் மிகுந்த மன உளைச்சலில் வாழ்ந்து வருவதாக கூறியுள்ளார்.

6)கடந்த 11.11.2025ம் தேதியன்று தபால் மூலமாக எதிர்மனுதாரர் மற்றும் திருப்பூர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு தபால் மூலமாகவும் 12.11.2025ம்

தேதியன்று நேரடியாகவும் உரிய ஆவணங்களுடன் புகார் அளித்ததாகவும் மனுதாரர் தரப்பில் பல்லடம் சார்பதிவாளர் மற்றும் திருப்பூர் மாவட்ட பதிவாளரிடமும் மேற்படி மோசடி சம்மந்தமாக மனு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் கடந்த 06.12.2025 ம் தேதியன்று ஏற்கனவே 11.11.2025 மற்றும் 12.11.2025 தேதிகளில் கொடுத்த புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்மனுதாரருக்கும், திருப்பூர் காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் மீண்டும் உரிய ஆவணங்களுடன் தபால் மூலமாக புகார் அளித்ததாகவும் அதனை பெற்றுக்கொண்டும் தற்போது வரை மோசடி குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தினால் மனுதாரர் வேறு வழியே இல்லாமல் நீதிமன்றத்தை நாடியுள்ளதாக கூறியுள்ளார்.

7)மேலும் குற்றவாளிக்கு அரசியல் மற்றும் பணபலம் கொண்டுள்ளதாலும் அவர்கள் மீது எந்தவித சிறு விசாரணையும் நடத்தாமல் வேண்டும் என்றே மனுதாரர் புகார்கள் மீது தற்போது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகின்றனர். மேற்படி குற்றவாளி சிவசாமி மோசடியாக நீதிமன்ற நடவடிக்கைகளை மறைத்தும் ஏற்கனவே OS.No. 1813/2008 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை மறைத்தும் சொத்து சுவாதீனம் குறித்த விவரங்களை மறைத்தும் குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தின் விவரத்தை மறைத்தும் மோசடியான முறையில் மனுதாரரின் சொத்தினை அபகரிக்கும் நோக்கில் மோசடி ஆவண பதிவு மேற்கொண்டுள்ளார் அதற்கான ஆதாரங்களும், ஆவணங்களும் இருந்தும் எதிர்மனுதாரர் தற்போது வரை குற்றவாளி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் இருப்பது சட்டப்படி நியாமற்றதாகும். எனவே, புகார்தாரரின் புகாரை ஏற்று பிரிவு 175(3) BNS ன் படி புகாரை எதிர்மனுதாரருக்கு அனுப்பி அதன்மேல் குற்றவாளி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8)மனுதாரர்தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது மனுதாரரின் கணவருக்கு பாத்தியப்பட்ட இடமானது திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாலுக்கா, வட்ட மலை பாளையம் கிராமம் க.ச.எண்.308/ 1ல் பு.ஏ. 4.28 இருந்து வந்து இதில் பு.ஏ. 2.14 பகுதி பூமியை மட்டும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த 2002 ம்

ஆண்டிலேயே விற்றுள்ளதாகவும், மனுதாரரின் கணவர் தந்தை காலஞ் சென்ற ஆறுமுகம் அவர்களுக்கு கடந்த 05.12.1974 ம் தேதியில் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட பத்திரஎண்.2012/1974 ன்படி அவரது அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்ததை கடந்த 30.10.1983 தேதியன்று ஆறுமுகம் எந்தவித ஏற்பாடு செய்து வைக்காமல் காலம் சென்றுவிட்டார் அவரது இறப்பிற்கு பிறகு மேற்படி சொத்து மற்றும் அவருக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களும் குடும்ப சொத்துக்களாக ஆறுமுகம் அவர்களின் மனைவி மயிலாத்தாள், மனுதாரரின் கணவர் வேலுச்சாமி மற்றும் மனுதாரரின் கணவர் தம்பி குற்றவாளியான சிவசாமி ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்துள்ளனர்.

9)மேற்படி சொத்துக்கள் குறித்து கடந்த 10.02.1984 ம் தேதியன்று பெரியோர்கள் முன்னிலையில் மயிலாத்தாள், வேலுச்சாமி, சிவசாமி ஆகியோர்களுக்கிடையில் வாய்மொழி பாகசாசமானது ஏற்படுத்தப்பட்டு மேற்படி வாய்மொழி பாகசாசனத்தை எழுத்து மூலமாக உறுதி செய்யும் பொருட்டு கடந்த 07.11.1986 ம் தேதியன்று மேற்படி காலஞ்சென்ற ஆறுமுகம் மனைவி மயிலாத்தாள், வேலுச்சாமி சிவசாமி ஆகியோர்களுக்கிடையில் குடும்ப பாக ஏற்பட்டு அட்டவணை பத்திரம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது அக்குடும்ப ஏற்பாட்டு பத்திரத்தின்படி ஆறுமுகத்திற்கு பாத்தியப் பட்ட சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் மனுதாரரின் கணவரான வேலுச் சாமிக்கு பரிபூரணமாக பாத்தியப்பட்டு அவரது அனுபவ சுவாதீனத்தில் மட்டும் இருந்து வந்தது. பின்னர் கடந்த 24.03.2008 ம் தேதியன்று லேட் ஆறுமுகம் அவர்களின் மனைவி மயிலாத்தாள் அவர்களும் காலஞ்சென்றுவிட்டதாகவும் இச்சூழ்நிலையை குற்றவாளி சிவசாமி தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மனுதாரரின் கணவர் வேலுச்சாமி ஆதரவற்று இருக்கும் சமயத்தில் சொத்துக்களில் பங்கு கேட்டு வேலுச்சாமியிடம் பிரச்சனை செய்ததால் மனுதாரரின் கணவர் கோயம்புத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி 07.11.1986 தேதியிட்ட குடும்ப பாக ஏற்பாடு அட்டவணை பத்திரம் குற்றவாளியான சிவசாமியை கட்டுப்படுத்தும் என விளம்புகை பரிகாரம் கோரி OS No,1813/2008 வழக்கு தாக்கல் செய்ததாகவும் மனுதாரரின் கணவர் வேலுச்சாமி கூறியுள்ள சங்கதிகளை உண்மை என ஒப்புக்கொண்டு Submitting to

Decree தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே கடந்த 02.04.2009 ம் தேதியன்று கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் குடும்ப பாக ஏற்பாட்டு அட்டவணை பத்திரம் சிவசாமியை கட்டுபடுத்தும் எனவும் மேற்படி சொத்தில் குற்றவாளி சிவசாமிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு கொடுத்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

10)அதன்பிறகு மனுதாரரின் கணவர் 2020 ம் ஆண்டு இறந்த பிறகு சொத்தை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர் மற்றும் அவரது மகளுக்கு எதிராக கோயம்புத்தூர் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி ஏற்கனவே மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் சொத்து வேலுச்சாமிஉடையது என்பதற்கான நீதிமன்ற தீர்ப்பு உள்ளதை மறைத்து அ.வ.எண்.938/2020 வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி வழக்கில் மனுதாரரும் மனுதாரரின் மகளும் ஏற்கனவே அ.வ.எண்.1813/2008 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, குடும்ப ஏற்பாட்டு பத்திரம் போன்றவற்றை மறைத்து தனக்கு பாத்தியமே இல்லாத சொத்தினை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கு நிலைக்கத் தக்கதல்ல என வழக்கை எடுத்த ஏற்புலேயே நிராகரிப்பு செய்யகோரி மனுதாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது.

11)மேற்படி அ.வ.எண்.1813/2008 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, குடும்ப ஏற்பாட்டு பத்திரம் அசல், சிவசாமி தாக்கல் செய்த Submitting to Decree என அனைத்தையும் மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்திற்கு உண்டான மூல ஆவண எண். 2012/1974 ன் அசல் மனுதாரரிடமே இருந்து வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில் நீதிமன்றம் மேற்படி மனுவில் உத்தரவு பிறப்பிக்கும் சூழ்நிலையில் சிவசாமி என்பவர் மோசடியாக நீதிமன்ற நடவடிக்கைகளை மறைத்தும் ஏற்கனவே OS.No.1813/2008 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை மறைத்தும் சொத்து சுவாதீனம் குறித்த விவரங்களை மறைத்தும் குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தின் விவரங்களை மறைத்தும் பதிவு செய்ய கட்டாயமான 2012/1974 ன் அசல் ஆவணம் இன்றியும் மோசடியாக பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த

04.11.2025 ம் தேதியன்று கோகுலகிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து அதனை 18058/2025 என்ற எண்ணாக பதிவு செய்தும், மேற்படி விவரத்தை கடந்த 10.11.2025 ம் தேதியன்று இணையதளம் மூலமாக வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தபோது மனுதாரருக்கு தெரியவந்துள்ளது.

12)கடந்த 11.11.2025 ம் தேதியன்று தபால் மூலமாக எதிர்மனுதாரர் மற்றும் திருப்பூர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு தபால் மூலமாகவும் 12.11.2025 ம் தேதியன்று நேரடியாகவும் உரிய ஆவணங்களுடன் புகார் அளித்ததாகவும் மனுதாரர் தரப்பில் பல்லடம் சார்பதிவாளர் மற்றும் திருப்பூர் மாவட்ட பதிவாளரிடமும் மேற்படி மோசடி சம்மந்தமாக மனு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் கடந்த 06.12.2025 ம் தேதியன்று ஏற்கனவே 11.11.2025 மற்றும் 12.11.2025 தேதிகளில் கொடுத்த புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்மனுதாரருக்கும், திருப்பூர் காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் மீண்டும் உரிய ஆவணங்களுடன் தபால் மூலமாக புகார் அளித்ததாகவும் அதனை பெற்றுக்கொண்டும் தற்போது வரை மோசடி குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதாக கூறப்பட்டுள்ளது.

13)பல்லடம் காவல் ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் மனுதாரர் கடந்த 12.11.2025 ம் தேதி கொடுத்த புகார் சம்மந்தமாக விசாரணை செய்ததில் மனுதாரரின் மாமனார் ஆறுமுகம் மனைவி மயிலாத்தாள் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்து வடமலைபாளையத்தில் க.ச.எண்.308/1 ல் 4 ஏக்கர் 28 செண்ட் பூமி உள்ளதாகவும் பின்னர் ஆறுமுகம் கடந்த 1983 வருடத்தில் இறந்துவிட்ட காரணத்தினால் அவருடைய மகன்கள் மூத்தமகன் வேலுச்சாமியும் இளைய மகன் சிவசாமியும் வாரிசாக இருந்ததாகவும் பின்னர் ஆறுமுகம் மனைவி மயிலாத்தாள் அவருடைய மூத்த மகள் வேலுச்சாமி இளைய மகன் சிவசாமி (மேஜர் ஆகாத நிலையில் ) அவர்களுக்குள் 1986 வருடத்தில் குடும்ப பாக ஏற்பாடு அட்டணை பத்திரம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள் ஆனால் அநத பத்திரம் ( ரிஜிஸ்டர் செய்யாத நிலையில்) அந்த ஆவணத்தில் இளைய மகன் சிவசாமி மைனராக இருப்பதால் அவர் மேஜனரானவுடன் அவருக்கு தனியாக சொத்து வாங்கி கொடுக்க வேண்டும் என்றும் மேற்படி சொத்து

வேலுச்சாமிக்கு தான் என்று தெரிவித்துள்ளார்கள். பின்னர் 2008ம் வருடத்தில் மயிலாத்தாள் இறந்துவிட்ட காரணத்தால் சொத்துக்கு வேலுச்சாமியும், சிவசாமியும் வாரிசாக இருக்கும் சூழ்நிலையில் சிவசாமிக்கும் அவருடைய மனைவி இந்திராவுக்கும் குடும்ப பிரச்சை ன காரணமாக விவாகரத்து வழக்கு போட்டு நடந்து வந்த நிலையில் சிவசாமி சொத்தில் அவருடைய மனைவிக்கு பங்கு கொடுக்க வேண்டும் என்பதற்காக அவருடைய அண்ணன் வேலுச்சாமி போட்ட வழக்கு எண். 1813/2008 சூட்டில் சிவசாமியின் பங்கை வேலுச்சாமிக்கு கொடுப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவித்து அதற்காக Submitting to Decree நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும் பின்னர் வேலுச்சாமி அவருடைய தம்பிக்கு 1986 வருடத்தில் குடும்ப பாக ஏற்பாடு அட்டவணை பத்திரத்தில் தெரிவித்துள்ளவாறு எந்த சொத்தும் வாங்கி கொடுக்காத சூழ்நிலையில் 03.04.2015ம் வருடத்தில் வேலுச்சாமி அவருடைய தம்பி சிவசாமிக்கு அவருடைய குடும்ப சொத்தில் இருந்து 2.14 ஏக்கர் நிலத்தை பத்திரம் செய்து கொடுப்பதாக பத்திரத்தில் எழுதி கொடுத்துள்ளார்( ரிஜிஸ்டர் செய்யாத நிலையில் உள்ளது). இந்நிலையில் வேலுச்சாமி கடந்த 2020 வருடத்தில் இறந்துவிட்ட காரணத்தாள் சிவசாமி அவருடைய அண்ணன் எழுதி கொடுப்பதாக தெரிவித்துள்ள 2.14 ஏக்கர் சொத்தை அண்ணன் மனைவி மனுதாரர் சாவித்ரியிடம் கேட்டபோது அவர் கொடுக்க மறுத்ததால் சிவசாமி சொத்தில் பங்கு வேண்டும் என்று கோவை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.938/2020 பதிவு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் சிவசாமி அவருக்கு அவருடைய அண்ணன் எழுதி கொடுக்கிறேன் என்று தெரிவித்த 2.14 ஏக்கர் நிலத்தை 04.11.2025ம் தேதியில் கோகுல் கிருஷ்ணன் என்பவருக்கு கொடுத்து விடுகிறார். இந்நிலையில் மனுதாரர் சாவித்ரிக்கும், எதிர்மனுதாரர் சிவசாமிக்கும் இருக்கு பிரச்சனை சொத்து சம்மந்தப்பட்ட பிரச்சனை என்பதாலும் ஏற்கனவே OS No,938/2020 வழக்கு நிலுவையில் உள்ளதாலும் நீதிமன்றம் சென்று சொத்து யாருக்கு சொந்தம் என்று பார்த்து கொள்ளுமாறு இருதரப்புக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

14)மேற்படியான ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த வழக்கின் சிவசாமிக்கும் அவரது இறந்துபோன அண்ணனுக்கு பாத்தியப்பட்ட

சொத்துக்களுக்கும் வாரிசுஉரிமைப்படியும், சட்டப்படியும் சொத்து சம்மந்தமான பிரச்சனை உள்ளதாக தெரியவருகிறது. ஏற்கனவே மனுதாரருக்கும் சிவசாமிக்கும் பங்கினை பிரித்து வழங்கி உள்ளதாலும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து சம்மந்தமான வழக்கு நடைபெற்று வருவதால் இம்மனுவில் சொத்து யாருக்கு பாத்தியம் என்று தீர்மானிக்க இயலாது. இதுகுறித்து நமது மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்முடிவான Anukul Singh Vs. State to Uttar Pradesh and anr 2025 என்ற தீர்முடிவில் பத்தி 18 ல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

18. Similarly, in Inder Mohan Goswami and another v. State of Uttaranchal and others18, it was emphasized that criminal prosecution must not be permitted as an instrument of harassment or private vendetta. In Ganga Dhar Kalita v. State of Assam19, this Court again reiterated that criminal complaints in respect of property disputes of civil nature, filed solely to harass the accused or to exert pressure in civil litigation, constitute an abuse of process.

மேலும் இதுகுறித்து மேற்படியான தீர்முடிவில் பத்தி 21 ல் கீழ்கண்டவாறு கூறப் பட்டுள்ளது.

21. The Machinery of criminal Law cannot be permitted to be misused for settling civil disputes or to wreal vengeance.

15)மேற்படியான தீர்முடிவானது இந்த வழக்கிற்கு பொருத்த கூடியதாக உள்ளது. எனவே, மனுதாரர் மற்றும் குற்றவாளியான சிவசாமி இடையேயான பிரச்சனை உரிமையியல் சம்மந்தமான பிரச்சனை என்பதால் இம்மனுவில் புலன்கொள்ளத்தக்க குற்றம் ஏதுமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவில் புலன் விசாரணை செய்ய காவல் துறையினருக்கு அறிவுறுத்த எவ்விதமான முகாந்திரமும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.08.06 21:18:11 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

ஆவண எண்.1 02.04.2009 தேதிய OS No,1813/2008 ல் வழங்கப்பட்ட Decree and

| | |
|---|---|
| | Judgment சான்றிட்ட நகலின் நகல் |
| ஆவண எண். 2 | 02.04.2009 தேதிய மேற்படி வழக்கில் சிவசாமி தாக்கல் செய்த Submitting Decree சான்றிட்ட நகலின் நகல் |
| ஆவண எண். 3 | 07.11.1986 தேதிய குடும்ப ஏற்பாட்டு பத்திரம் சான்றிட்ட நகலின் நகல் |
| ஆவண எண். 4 | 10.06.2022 தேதி OS No, 938/2020 ன் Written Statement சான்றிட்ட நகலின் நகல் |
| ஆவண எண். 5 | 10.06.2022 ம் தேதிய IA No,4/ 2022 மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் சான்றிட்ட நகலின் நகல் |
| ஆவண எண். 6 | 11.03.2025 ம் தேதிய IA No,4/2022 ல் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எழுத்துமூலமான வாதுரை சான்றிட்ட நகலின் நகல் |
| ஆவண எண். 7 | 04.11.2025 தேதிய கிரைய ஆவண எண். 18058/2025 சான்றிட்ட நகலின் நகல் |
| ஆவண எண். 8 | 11.11.2025 ம் தேதிய மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அளித்த புகார் மனு நகல் |
| ஆவண எண்.9 | 11.11.2025 தேதிய அஞ்சல் ரசீது அசலின் நகல் |
| ஆவண எண்.10 | 12.11.2025 ம் தேதிய அஞ்சல் ஒப்புகை அட்டைஅசலின் நகல் |
| ஆவண எண்.11 | 11.11.2025 ம் தேதி மனுதாரர் திருப்பூர் காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகார் மனு நகல் |
| ஆவண எண்.12 | 11.11.2025 ம் தேதி அஞ்சல் ரசீது அசல் |
| ஆவண எண்.13 | 22.06.2020 ம் தேதி மனுதாரர் ஆதார் அட்டை நகல் |
| ஆவண எண்.14 | 12.11.2025 ம் தேதி மனுதாரர் நேரடியாக எதிர்மனுதாரர் மற்றும் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுக்கள் நகல் |
| ஆவண எண்.15 | 06.12.2025 ம் தேதி மனுதாரர் மீண்டும் எதிர்மனுதாரரிடம் அளித்த புகார் மனு நகல் |
| ஆவண எண்.16 | 06.12.2025 ம் தேதி அஞ்சல் ரசீது அசலின் நகல் |
| ஆவண எண்.17 | 08.12.2025 ம் தேதி அஞ்சல் ஒப்புகை அட்டை அசலின் நகல் |
| ஆவண எண்.18 | 06.12.2025 ம் தேதி மனுதாரர் மீண்டும் திருப்பூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலரிடம் கொடுத்த புகார் மனு நகல் |
| ஆவண எண்.19 | 06.12.2025 ம் தேதிய அஞ்சல் ரசீது அசலின் நகல் |
| ஆவண எண்.20 | 08.12.2025 ம் தேதிய அஞ்சல் ஒப்புகை அட்டை அசலின் நகல் |

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.08.06 21:18:20 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.